**செய்தி வெளியீடு எண் :06** **நாள்: 15.02.2025**

**<u>தமிழ்நாடு ஆளுநர் மாளிகை, தமிழ்நாட்டிலிருந்து "காசி தமிழ் சங்கமம் 3.0-2025-ல் பங்கேற்கும் பிரதிநிதிகளுக்கான அனுபவப் பகிர்வு" என்ற தலைப்பில் போட்டியை அறிவித்துள்ளது.</u>**

**காசி தமிழ் சங்கமம்** என்பது இந்தியாவின் இரு பண்டைய அறிவு மையங்களான காசி மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றுக்கு இடையே உள்ள பல நூற்றாண்டுகள் பழமையான கலாச்சார தொடர்பை மீட்டெடுக்கவும், வலுப்படுத்தவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் மேற் கொண்டுள்ள முன்முயற்சியாகும். தமிழ்நாடு மற்றும் காசி ஆகிய இரு பகுதிகளிலும் கடந்த இரண்டு பதிப்புகளில் கிடைத்த உற்சாகத்தையும், அமோக வரவேற்பையும் கண்டறிந்து, இந்நிகழ்ச்சியை இந்த ஆண்டு வாரணாசியில் (காசி) 15 பிப்ரவரி 2025 முதல் 24 பிப்ரவரி 2025 வரை திட்டமிடப்பட்டுள்ளது. தமிழகத்திலிருந்து சுமார் 1000 பிரதிநிதிகள் (மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், எழுத்தாளர்கள், தொழில் முனைவோர்கள், மகளிர், ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள், ஸ்டார்ட்அப்கள்) மற்றும் பல்வேறு மத்திய பல்கலைக்கழகங்களில் படிக்கும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த 200 மாணவர்களைக் கொண்ட ஒரு குழு காசி மற்றும் பிற முக்கிய இடங்களுக்குச் செல்வார்கள்.

இச்சங்கமத்தின் வாயிலாக தமிழ்நாடு மற்றும் காசியின் கலை, கைவினைப்பொருட்கள், கைத்தறிகள், உணவு வகைகள் போன்றவற்றைக் கொண்டாடும் கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சி ஆகியவை பங்கேற்பாளர்களுக்கு ஒரு ஆழ்ந்த அனுபவத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிரயாக்ராஜின் சங்கமத்தில் நடைபெறும் மகா கும்பம் கொண்டாட்டம் என்ற மற்றொரு முக்கிய நிகழ்வோடு இந்த ஆண்டு இந்நிகழ்ச்சி இணைந்துள்ளது. <u>இந்த ஆண்டு நிகழ்வின் முக்கிய கருப்பொருள், அகஸ்தியர் முனிவரின் சித்த மருத்துவ முறைக்கு (பாரதிய சிகிட்சம்) குறிப்பிடத்தக்க பங்களிப்பையும், செம்மொழி தமிழ் இலக்கியம், இலக்கணம் போன்ற துறைகளில் அவர் ஆற்றிய பங்களிப்புகளையும் எடுத்துரைத்து, அதன் மூலம் இரு கலாச்சாரங்களுக்கிடையில் இணைப்பை உருவாக்குகிறது.</u>

இந்தச் சந்தர்ப்பத்தில், <u>காசி தமிழ் சங்கமம் 3.0 - 2025 தமிழ்நாட்டிலிருந்து கலந்துகொள்ளும் பிரதிநிதிகளுக்கு</u> **"காசி தமிழ் சங்கமத்தின் அனுபவப் பகிர்வு 3.0 - 2025"** என்ற தலைப்பில் தமிழ்நாடு ஆளுநர் மாளிகை ஒரு போட்டியை அறிவிக்கிறது.

"அனுபவ பகிர்வு" **கட்டுரைகள்** தமிழ் அல்லது ஆங்கிலத்தில் குறைந்தபட்சம் 1000 சொற்களைக் கொண்ட, கையால் எழுதப்பட்ட வடிவத்தில் (ஏ4 தாள்கள் மட்டும்) இருக்க வேண்டும்

"அனுபவ பகிர்வு" போட்டியானது காசி தமிழ் சங்கமம் 3.0 2025 தமிழ்நாட்டிலிருந்து வரும் பிரதிநிதிகளுக்கு மட்டுமே அனுமதி. பங்கேற்பாளர்கள் பின்வரும் அஞ்சல் முகவரிக்கு “வன் நகலை" அனுப்ப வேண்டும்:

**ஆளுநரின் துணைச் செயலாளர் (பல்கலைக்கழகங்கள்),**
**ஆளுநர் செயலகம், ஆளுநர் மாளிகை,**
**சென்னை - 600 022.**

"அனுபவப் பகிர்வு" பற்றிய பதிவு மற்றும் கட்டுரைகள், 14 மார்ச், 2025 அன்று அல்லது அதற்கு முன் மேற் குறிப்பிட்டுள்ள அஞ்சல் முகவரியைச் சென்றடைய வேண்டும். பங்கேற்பாளர்கள் தங்களின் பெயர், குடியிருப்பு முகவரி, தொகுதி எண், காசி-தமிழ் சங்கமம் 3.0 - 2025 இல் உள்ள குழுவின் வகை ஆகியவற்றைத் தங்களின் தொடர்பு எண்களுடன், தங்கள் எழுத்துப் பதிவை அனுப்பும்போது தெளிவாகக் குறிப்பிட வேண்டும். கட்டுரைகளுடன் விருப்பத்திற்கேற்ப புகைப்படம்/வீடியோவை சமர்ப்பிக்கலாம்.

ஒவ்வொரு பிரிவிற்கும் (மாணவர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், எழுத்தாளர்கள், தொழில் முனைவோர்கள், மகளிர், ஆராய்ச்சியாளர்கள், வல்லுநர்கள், ஸ்டார்ட்அப்கள்) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மூன்று சிறந்த கட்டுரைகள், ஒரு நிபுணர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநரால் பாராட்டப்படுவார்கள். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெறுபவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் (முதல் பரிசு ரூபாய் பத்தாயிரம், இரண்டாம் பரிசு ரூபாய் ஏழாயிரம், மூன்றாம் பரிசு ரூபாய் ஐந்தாயிரம்) மற்றும் சான்றிதழ்கள் தமிழ்நாடு ஆளுநர் மாளிகையில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும்.

---

**ஆளுநர் மாளிகை, சென்னை-22** **வெளியீடு :-**

**நாள்: 15.02.2025** **மக்கள் தொடர்பு அலுவலகம்**